செய்தி வெளியீடு எண்: 179 நாள்: 28.02.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 27.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், காஞ்சிபுரம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், கிருஷ்ணகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் 1 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குறுவட்ட அளவர்களுக்கான குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

மக்களை தேடி அரசு எனும் சீரிய கோட்பாட்டின்படி, அரசின் மக்கள் நலத்திட்டங்களை ஏழை எளிய மக்களிடையே முறையாக கொண்டு சென்று, அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மேம்பாட்டிற்காக, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல், நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையின் குறுவட்ட அளவர்களுக்கான குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தஞ்சாவூர் மாவட்டம் – பட்டுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம் – பேய்க்குளம். காஞ்சிபுரம் மாவட்டம் – வண்டலூர், விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் மற்றும் வானூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துவரங்குறிச்சி, மதுரை மாவட்டம் – சக்கிமங்கலம், சிவகங்கை மாவட்டம் – காரைக்குடி மற்றும் சாக்கோட்டை, தேனி மாவட்டம் – கொடுவிலார்பட்டி மற்றும் மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம் – சூளகிரி, சேலம் மாவட்டம் – சங்ககிரி கிழக்கு ஆகிய 13 இடங்களில் 1 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குறுவட்ட அளவர்களுக்கான குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, நிரப்பப்பட்டு வருகின்றன. அந்த வகையில், 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்பட்ட 1822 கிராம நிர்வாக அலுவலர் காலிப் பணியிடங்களுக்கு 2018ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டனர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 1822 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., வருவாய்த் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் டாக்டர் இரா. செல்வராஜ், இ.ஆ.ப., வருவாய் நிருவாக இணை ஆணையர் திருமதி எம். லஷ்மி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**